

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (29.07.2023) தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் உள்ள மாணவர் படப்பிடிப்புத் தளத்தினை பார்வையிட்டார்கள். இந்த ஆய்வின்போது முதலமைச்சரின் செயலாளர் முனைவர் ம.சு.சண்முகம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், இந்நிறுவனத் தலைவர் வி.ராஜேஷ், மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (29.07.2023) தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் ANIMATION VISUAL EFFECTS கட்டடத்தில் செயல்பட்டு வரும் ஒலிப்பதிவுக் கூடத்தினை பார்வையிட்டார்கள். இந்த ஆய்வின்போது முதலமைச்சரின் செயலாளர், முனைவர் ம.சு.சண்முகம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு. இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், இந்நிறுவனத் தலைவர் வி.ராஜேஷ், மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்குப் பகுதி 108(அ) வட்டத்தில்

# அனைத்து பிரிவினருக்கான முதல்வர் கோப்பை குத்துச்சண்டை போட்டிகள்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. பரிசு வழங்குகின்றனர்! வி.சுதாகர் - சோ.வேலு - கோ.ஏகப்பன் பங்கேற்பு!

*சென்னை, ஜூலை 30*

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்கு பகுதி 108 அ வட்டம் சேத்துப்பட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100வது பிறந்தநாளையொட்டி தமிழக முதல்வர் கோப்பைகான மாநில சீனியர், ஜூனியர், சப் ஜூனியர், யூத், ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொள்ளும் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டிகள் - 2023, 28.07.2023 அன்று முதல் 30.07.2023 வரை மேயர் இராமநாதன் சாலை, மாநகராட்சி விளையாட்டுத் திடலில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க நடைபெறுகிறது.

108 'அ' வட்ட துணை செயலாளர் மு.குறளரசன் தலைமை வகிக்கிறார்.

எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர், எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் சொ.வேலு எம்.சி., மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன், பா.ஸ்ரீராமுனு, கூ.பீ. ஜெயின் எம்.சி, கே.எஸ். எம்.நாதன், பரிதிஇளம்சுருதி எம்.சி., எல். சுந்தர்ராஜன் எம்.சி., ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., அ.நிர்மலாதேவி, வான்மதி கதிரவன், எம்.ரமேஷ், எம்.வெற்றிவேலன், க.வினோத், தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் எஸ்.ரசூல், டி.வி. வேலு, எம்.மலர்மாறன், கே.அன்னபூரணி, எஸ். ஜெகதீசன், டால்பின் எஸ். அரி, இ.மொய்தீன், ஆர். பாபு (எ) சந்திரசேகரன், வி.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் - இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் பி. கே.சேகர்பாபு, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., மேயர் பிரியா ராஜன், ப.ரங்கநாதன், இ.பரந்தாமன் எம். எல்.ஏ. ஆகியோர் பரிசுகள் வழங்குகிறார்கள்.

மாநில நிர்வாகிகள் கே. எஸ்.இரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த், பி. கே.மூர்த்தி, கே.சந்துரு, சகரிநாராயணன், எம்.விஜயகுமார் என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, 108 அ வட்ட கழக நிர்வாகிகள் சி. டி.சுரேஷ், எஸ்.சரஸ்வதி, எம்.எஸ்.ரமேஷ் (எ) அப்பேன், இரா.பாலமுருகன், கு.அனல்தமிழா, ஆண்ட்ரூஸ் (எ) ரமேஷ், என். இளஞ்செழியன், கே.என் ஆர்.நக்கீரன், த.மகேஸ்வரன், கி.அருண் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள் மாவட்ட பகுதி வட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், பாகமுகவர்கள், கழக முன்னோடிகள் கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

108 'அ' வட்ட அவைத்தலைவர் கு.ஜிம்போ (எ) முனுசாமி, மாநில பொதுச் செயலாளர் தமிழ்நாடு மாநில குத்து சண்டை சங்கம் ஜி.பிரிதிவிராஜ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

## திருவள்ளூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில்

# கலைஞர் மகளிர் உரிமை திட்ட விண்ணப்பப்பதிவு முகாம்கள்!

### அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி நேரில் ஆய்வு!

திருவள்ளூர், ஜூலை 30

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க திருவள்ளூர் மாவட்டத்தின் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் முதற்கட்ட விண்ணப்ப பதிவு முகாம்களை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர். காந்தி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பயனாளிகள் மற்றும் தன்னார்வலர்களோடு கலந்துரையாடி ஆலோசனைகள் வழங்கினார்.

முதலாவதாக, திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டை ஊராட்சி ஒன்றியம், எஸ்.வி.ஜி.புரம் ஊராட்சி கிராம ஊராட்சி சேவை மைய கட்டிடத்தில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் முதற்கட்ட விண்ணப்ப பதிவு முகாமையும் திருத்தணி வட்டத்திற்குட்பட்ட கே.ஜி.கண்டிகை ஊராட்சி மற்றும் டாக்டர்.ராதாகிருஷ்ணன் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் கலைஞர் மகளிர் உரிமை திட்ட விண்ணப்ப பதிவு முகாம்களையும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து, திருவள்ளூர் வட்டத்திற்குட்பட்ட பட்டரைபெரும்புதூரில் உள்ள இ சேவை மையம் மற்றும் திருப்பாச்சூர் ஊராட்சி அலுவலகம் ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் கலைஞர் மகளிர் உரிமை திட்ட விண்ணப்ப பதிவு முகாம்களையும் ஊத்துக்கோட்டை வட்டத்துக்கு உட்பட்ட அம்மம்பாக்கம் சித்தேரி அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் ஊத்துக்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் கலைஞர் மகளிர் உரிமை திட்ட விண்ணப்ப பதிவு முகாம்களையும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து அம்முகாம்களில் உள்ள பயனாளிகளோடு கலந்துரையாடி கருத்துகளை கேட்டறிந்தார்.

தொடர்ந்து, அம்முகாம்களில் உள்ள தன்னார்வலர்களோடு கலந்துரையாடி அவர்களுக்கு ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கினார்.

மேலும், திருவள்ளூர் வட்டத்திற்குட்பட்ட வெங்கல் மகளிர் சுய உதவி குழு கட்டிடம் மற்றும் நத்தமேடு நூலக கட்டிடம் ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் கலைஞர் மகளிர் உரிமை திட்ட விண்ணப்ப பதிவு முகாம்களை யும் ஆவடி உயர்நிலைப் பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் கலைஞர் மகளிர் உரிமை திட்ட விண்ணப்ப பதிவு முகாம்களையும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பயனாளிகளோடு கலந்துரையாடி, அம்முகாம்களில் உள்ள அரசு அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கினார்.

இந்நிகழ்வுகளில் கவச ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ், மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ. கோவிந்தராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் க.தீபா, வட்டாட்சியர்கள் எஸ்.விஜய குமார் (ஆவடி), கே. சுரேஷ் குமார் (திருவள்ளூர்) ஜி.விஜயகுமார், (ஆர்.கே.பேட்டை) மதன் (திருத்தணி), எஸ்.வசந்தி (ஊத்துக்கோட்டை)தனி வட்டாட்சியர் (ச.பா.தி) சங்கிலிரதி, திருநின்றவூர் நகராட்சி ஆணையர் மா.புஹேந்திரி, ஆர்.கே. பேட்டை ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ரஞ்சிதா ஆபாவாணன், ஊத்துக்கோட்டை பேரூராட்சி தலைவர் அப்துல் ரஷித், துணைத் தலைவர் குமரவேல், மாவட்ட திட்டக்குழு (நகர்ப்புற உள்ளாட்சி) உறுப்பினர் அபிராமி குமரவேல், பூண்டி ஒன்றிய குழு துணை தலைவர் மகாலட்சுமி மோதிலால், ஒன்றிய கவுன்சிலர்கள் சுபாஷினி பாஸ்கர், மஞ்சு லிங்கேஷ் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், தன்னார்வலர்கள், பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

## புலவர் இந்திரகுமாரி தலைமையில்

# ராபா புக் ஆப் வேல்டு ரெக்கார்ட்ஸ் குழுமம் சார்பில் உலக சாதனை விழா! சர்வதேச கலாச்சார விழா!

### காவல் துணை ஆணையர் பி.குமார்,அன்னி பிரீத்தா மேரி பங்கேற்பு!

சென்னை, ஜூலை 30 -

ராபா புக் ஆப் வேர்ல்டு ரெக்கார்ட்ஸ் குழுமம் சார்பில் உலக சாதனை விழா மற்றும் சர்வதேச கலாச்சார விழா,கழக இலக்கிய அணி தலைவர் புலவர் இந்திர குமாரி தலைமையில் நடைபெறுகிறது.

ராபா புக் ஆப் வேல்ட் ரெக்கார்ட்ஸ் குழுமம் சார்பில் உலக சாதனை விழா மற்றும் கலாச்சார விழா (இன்று 30.7.2023 ஞாயிற்றுக்கிழமை) 2மணி அளவில் காரம்பாக்கம், போரூர் வேலம்மாள் வித்யாலயா பள்ளியில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு கழக இலக்கிய அணி தலைவர் புலவர் இந்திரகுமாரி தலைமை வகிக்கிறார்.

சென்னை,கோயம்பேடு காவல் துணை ஆணையர் பி.குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். வேலம்மாள் வித்யாலயா பள்ளி முதல்வர் வித்யா ரத்னா திருமதி அன்னி ப்ரீத் தாமேரி அறிமுக உரையாற்றுகிறார். ராபா மீடியா குழும நிறுவனர் ஆர்.பிரசன்னா வரவேற்புரை நிகழ்த்துகிறார்.

கலாரத்னா ஜானி மாஸ்டர் வாழ்த்துரை வழங்குகிறார். வித்யா ரத்னா திருமதி விஜயலட்சுமி காமேஸ்வரி(துணை ஆசிரியர் ராபா புக் ஆப் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ்) நன்றியுரையாற்றுகிறார்.

## சென்னை வடகிழக்கு மாவட்ட

# வர்த்தக அணியின் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் லயன் வீ.தியாகராஜன் அறிக்கை!

சென்னை ஜூலை 30

சென்னை வடகிழக்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் லயன் வீ. தியாகராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம்.எஸ். சுதர்சனம் ஆலோசனைப்படி சென்னை வடகிழக்கு மாவட்ட வர்த்தக அணியின் அறிமுக மற்றும் ஆலோசனை கூட்டம் இன்று (30.7.2023 ஞாயிற்றுக்கிழமை) மதியம் 11 மணியளவில் என் 63/73 இராண்டாவது தெரு அன்னை சிவகாமி நகர் எண்ணூரில் உள்ள மாவட்ட வர்த்தக அணி அலுவலகத்தில் மாவட்ட வர்த்தக அணி தலைவர் ஆர்.பாபு தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட வர்த்தக அணி துணைத் தலைவர் மற்றும் மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் இவ்வாறு அவர் கேட்டு கொண்டுள்ளார்.

## சென்னை பெருநகர மாநகராட்சி சார்பில்

# இராயபுரம் மண்டலத்தில் ரூ 3.82 கோடியில் திட்டப்பணிகள்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. ஆய்வு!

சென்னை, ஜூலை 30-

பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு59, அண்ணா சாலை, சத்திய வாணி முத்து நகரில் 2022 23ஆம் ஆண்டிற்கான வெள்ள நிவாரண நிதியின் கீழ், ரூ.2.77 கோடி மதிப்பிலான புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மத்திய நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் நேற்று (29.07.2023) தொடங்கி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து, 202223ஆம் ஆண்டிற்கான மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ், வார்டு60, அங்கப்ப நாயக்கன் தெருவில் உள்ள சென்னை உருது பள்ளியில் ரூ.24.50 இலட்சம் மதிப்பில் கட்டப்படும் மற்றும் உட்கட்டமைப்பு மேம்படுத்தும் பணியினையும், மூர் தெரு மற்றும் போஸ்ட் ஆபிஸ் தெருவில் ரூ.10.50 இலட்சம் மதிப்பில் சாலை பணியினையும் தொடங்கி வைத்தனர்.

பின்னர், வார்டு56, வெங்கட மேஸ்திரி தெருவில் உள்ள பல்நோக்கு மையக் கட்டடத்தில் நடைபெற்று வரும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கு விண்ணப்பங்களை பதிவு செய்வதற்கான முகாமினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பயனாளிகளிடம் கலந்துரையாடினார்கள். மேலும், 2022 23ஆம் ஆண்டிற்கான மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.35 இலட்சம் மதிப்பில் புதிய தரை தள முதல் தளம் கட்டும் பணியினையும், வார்டு 54க்குட்பட்ட அம்மன் கோயில் தெருவில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் ரூ.20 இலட்சம் மதிப்பில் மேம்படுத்தும் பணியினையும், ரூ.6 இலட்சம் மதிப்பில் உட்வார்ஃப் 1ஆவது சந்தில் உள்ள அங்கன்வாடி மையத்தினை மேம்படுத்தும் பணியினையும், ரூ.9 இலட்சம் மதிப்பில் சரவணன் தெருவில் உள்ள சாலையோரப் பூங்காவினை மேம்படுத்தும் பணியினையும் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து, இராயபுரம் மண்டலம், யானைகவுனி பகுதியில் மூலதன நிதியின் கீழ், ரூ.27.48 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலப் பணிகளை இந்து சமயம் மற்றும் அறநிலைத்துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் நேற்று (29.07.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

மேலும், கல்யாணபுரத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினர்.

இதன் தொடர்ச்சியாக இராயபுரம் மண்டல அலுவலகத்தில் இந்து சமயம் மற்றும் அறநிலைத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, வடக்கு வட்டார துணை ஆணையாளர் எம்.சிவகுரு பிரபாகரன், மண்டலக்குழுத்தலைவர் பி.ஸ்ரீராமுலு, தலைமை பொறியாளர் (பொது) எஸ்.இராஜேந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் மண்டல அலுவலர் மற்றும் இரயில்வே அலுவலர்கள் பொறியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி,இராயபுரம் மண்டலம், யானைகவுனி பகுதியில் மூலதன நிதியின் கீழ், ரூ.27.48 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலப் பணிகளை இந்து சமயம் மற்றும் அறநிலைத்துறை அமைச்சர் பி. கே. சேகர் பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் நேற்று (29.07.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின் போது மேயர் திருமதி ஆர். பிரியா, மண்டலக்குழு தலைவர் (இராயபுரம்) பி. ஸ்ரீராமுலு, தலைமை பொறியாளர் (பொது) எஸ். இராஜேந்திரன், மாமன்ற உறுப்பினர் மண்டல அலுவலர் மற்றும் இரயில்வே அலுவலர்கள் பொறியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்


## தி.மு.க மாணவர் அணி

# நகர, பகுதி, ஒன்றியம், பேரூர் அமைப்பாளர் துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்கான விண்ணப்பம்!

### மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு !

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நகர, பகுதி, ஒன்றியம், பேரூர் அமைப்பாளர் துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

நகர, பகுதி, ஒன்றியம், பேரூர் அமைப்பிற்கு ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படுவர்.

துணை அமைப்பாளர்களில் ஒருவர் ஆதிதிராவிடர்/பழங்குடியின இனத்தைச் சேர்ந்தவராகவும் மற்றும் பெண் துணை அமைப்பாளர் ஒருவரும் இருப்பது அவசியம்.

ஒரு துணை அமைப்பாளர், கண்டிப்பாக தற்போது கல்லூரியில் பயிலக்கூடிய மாணவராக இருத்தல் அவசியம்.

இப்பொறுப்புகளில் உள்ள தற்போதைய நிர்வாகிகள், மீண்டும் அப்பொறுப்புகளுக்கு வர விரும்பினால், அவர்களும் விண்ணப்பிக்க வேண்டியது அவசியம்.

30 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டும் இப்பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்கவும்.

நியமிக்கபடவுள்ள நிர்வாகிகள் அனைவரும் கல்லூரிப்படிப்பை முடித்தவராகவோ அல்லது தற்போது கல்லூரியில் பயிலக்கூடியவராகவோ இருத்தல் அவசியம்.

முரசொலியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை நகல் எடுத்தோ, மாவட்டக் கழகத்திடமிருந்தோ அல்லது வலைதள முகவரியிலிருந்தோ பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் தெளிவாக, முழுமையாக நிரப்பி, பாஸ்போர்ட் அளவு கலர் புகைப்படம் ஒட்டி விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பத்துடன் கழக உறுப்பினர் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை / ஆதார் அட்டை, கல்விச் சான்றிதழின் நகல் இணைப்பது அவசியம்.

முழுமையாகப் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை மாவட்டக் கழகத்திலோ, மாவட்ட அமைப்பாளரிடமோ, தலைமைக் கழகத்திலோ ஆகஸ்ட் மாதம், 10ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 06.00 மணிக்குள் ஒப்படைக்க வேண்டும். தாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தை முன்னிட்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்புகளுக்கான அமைப்பாளர்துணை அமைப்பாளர்கள் நேர்காணல், அந்தந்த மாவட்டத்திலேயே மாநில மாணவர் அணி நிர்வாகிகளால் நடத்தப்படும். நேர்காணல் நடைபெறும் நாள், நேரம், இடம் மாவட்டக் கழக செயலாளருடன் கலந்து பேசி பின்னர் தெரிவிக்கப்படும்.

ஒன்றிய கிளைகள், நகரபகுதிபேரூர் வார்டுகளில் மாணவர் அணி நிர்வாகிகளைத் தேர்வு செய்வது குறித்த அறிவிப்பு பிறகு வெளியிடப்படும்.

விண்ணப்பப் படிவம் பதிவிறக்கம் செய்ய: http://surl.li/jmwoy

மேலும் தொடர்புக்கு:
முகநூல் https://www.facebook.com/EzhilarasanCVMP
டுவிட்டர் https://twitter.com/EzhilarasanCvmp

"அண்ணா அறிவாலயம்,"
சென்னை18.
நாள்: 29-07-2023

சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ.
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி